IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.80 /2023
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : முரளி | Caste | : - |
| Husband Name | : சுப்பிரமணி | Calling | : – |
| Village | : உள்ளிபுதூர் | Religion | : |
| Town | : காட்பாடி தாலுக்கா | Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December, 2023.

Chief Continuation:

1. நான் இவ்வழக்கில் 1–ம் வாதி. ஏற்கனவே எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். 3–ம் வாதி லாவண்யா–வின் ஆதார் அட்டையின் நகல் வா.சா.ஆ–8 ஆகும்.(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை:

1. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா திப்பிரெட்டியின் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளோம். என் தாத்தா 12.01.1988–ல் இறந்ததாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு ஆண் பெண் வாரிசுதாரர்களின் விவரங்களை குறித்து எனது சாட்சியத்திலோ அல்லது வழக்குரையிலோ குறிப்பிட்டு கூறியுள்ளோமோ என்றால் குறிப்பிட்டுள்ளோம்.

2. என் தாத்தா இறந்து 36 ஆண்டுகள் ஆகியிருக்குமா என்றால் இருக்கும். என் தாத்தாவின் வாரிசு சான்றிதழ் கேட்டு 2–ம் பிரதிவாதியிடம் கடந்த 2022–ல் மனு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளும், எனது முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளும் முன்னுக்கு பின் முரணாக உள்ளதால் இவ்வழக்கில் நாங்கள் கோரும் பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

3. என்ன காரணங்களுக்காக என் தாத்தாவின் வாரிசு சான்றிதழ் தேவைப்படுகிறது என்ற விவரத்தினை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிட்டுள்ளோம். வா.சா.ஆ–1 யை தவிர மற்ற ஆவணங்கள் எங்களால் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் இல்லை. 2–ம் பிரதிவாதியின் மனு விசாரணையில் உரிய ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்திருந்தால் அதனை விசாரித்து 2–ம் பிரதிவாதியே வாரிசு சான்றிதழ் வழங்கி இருப்பார் என்றும், அவ்வாறு நாங்கள் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்பதால்தான் வாரிசு சான்றிதழ் வழங்கப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் உரிய ஆவணங்களை 2–ம் பிரதிவாதியிடம் கொடுத்திருந்தோம்.

4. என் தாத்தா இறந்து 36 ஆண்டுகள் கழித்து காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்தான் வாரிசு சான்றிதழ் வழங்கப்படவில்லை என்றால் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளும்படி நிராகரித்து விட்டார். முன்னுக்கு பின் முரணாக சங்கதிகள் வாதுரையிலும், எனது சாட்சியத்திலும் உள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

K VENKATESAN

Digitally signed by K VENKATESAN
Date: 2023.12.20 15:24:10 +0530

DISTRICT MUNSIF,

KATPADI